**Master Of Arts :2011-2012**
**Modern Trends in Islam : ISC-601**

# *18-19-* ம் நூற்றாண்டுகளில் முஸ்லிம்களின் சமூக சமய பொருளாதார நிலைகளை விளக்கி "சேர் செய்யத் அஹ்மத்கான்", "இமாம் ஹஸனுல் பன்னா" ஆகியோரின் சீர் திருத்தப்பணிகளை ஆராய்க!


மாணவர் பெயர்: எம்.ஜே.எம். ரிஸ்வான்

பதிவு இலக்கம்: HD/ MA/ 08-09-/559

விரிவுரையாளர் : எம். எல். எம். ஹனீ்.பா. (M.PHIL)

**(விரிவுரையாளர்: அரபு இஸ்லாமிய நாகரீகத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)**

# முன்னுரை

அளவற்ற அருளாளன் நிகரற்ற கருணை உடைய அல்லாஹ் ஒருவனுக்கே அனைத்து புகழும், துதியும் உரித்தானது. அவன் ஆதாம் என்ற ஒரு ஆண்மாவின் விலா எலும்பில் இருந்து ஹவ்வா என்ற பெண்ணைப்படைத்து அவரை அவருக்கு மனைவியாக்கினான். அவ்விருவருக்கும் பிறந்தவர்கள் மனித இனம் என்று இஸ்லாம் கூறுகின்றது.

இஸ்லாம் நிறம், தேசம், மொழிகளுக்கு அப்பால் நின்று சகோதரத்துவத்தைப்போதிக்கின்ற மார்க்கமாகும். அதன் தூதை இறுதியாக ஏந்தி வந்த முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் குல வெறியால் மக்கள் பிளவுபட்டு தமக்குள் சண்டை செய்து கொண்டிருந்தனர்.

அவர்களுக்கு இஸ்லாமிய சகோதரத்துவத்தைப் போதித்த போது அவர்கள் காலம்காலமாக இருந்த இனப்பாகுபாடி பற்றி சிந்திக்கலானார்கள். மனிதர்களை நிற, மொழி, குல அடிப்படையில் பிரித்து நோக்குவதை விடுத்து இஸ்லாமிய சகோதரத்துமுறைக்கு திரும்பினார்கள்.

ஜாஹிலிய்யக்கால நடைமுறைகளை ஒதுக்கி இஸ்லாமிய நடைமுறைகளைச் சரிகண்டார்கள். அதனால் கிராமப்புற அரபுக்கள், உயர் குலத்தினர், ரோமர், பாரஸீகர், எமன் தேசத்தவர், மக்காவின் புத்திரர்கள், மதீனத்தவர் போன்ற குலப்பேதங்கள் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டன.

இந்த நிலை நபிகள் நாயகத்திக் மரணத்தின் பின்னால் ஆட்சி செய்து கலீ:.பாக்கள் முதல் இஸ்லாமிய கிலா:.த்தின் வீழ்ச்சி ஆண்டுகள் வரை நீடித்தது. அரபுக்கள் துர்க்கியர் என்ற பாகுபாடு எப்போது இஸ்லாமியர்கள் மத்தியில் விதைக்கப்பட்டதோ அப்போதிருந்து முஸ்லிம் சமூகத்தின் தனித்துவம் கேள்விக்குறியானது.

தேசிய வாதத்தின் பெயரால் அதன் முதுகம் தண்டு ஒடிக்கப்பட்டது. அதனால் முஸ்லிம்கள் துர்கியர் அரபிகள் என்ற வர்க்க பேதத்தின் மூலம் இஸ்லாமி அரசு சிதைக்கப்பட்டது. அதன் அதிகாரத்தின் கீழ் இருந்த நாடுகள் சிறு சிறு நாடுகளாகத் துண்டாடப்பட்டன. அவர்கள் மத்தியில் எல்லைத்தராறுகள் ஏற்பட்டன.

தேசியத்தின் பெயரால் உயிர்கள் பலியாக்கப்பட்டன. பல நாடுகள் காலணித்துவ ஆதிக்க சக்திகளின் கீழ் சென்றன. இஸ்லாமி சட்டம் படிப்படியாக பிடுங்கப்பட்டு அங்கு பிரான்ஸியச் சட்டமும், ஐரோப்பியர் சட்டமும் ஆளத்தொடங்கின. முஸ்லிம் மாணர்வகள் மேல்படிப்பின் பெயரால் ஐரோப்பாவிற்கு அழைக்கப்பட்டு மூளைச் சலவை செய்யப்பட்டனர். இஸ்லாத்தை இழந்த நிலையில் அரபுப் பெயர்கள் தாங்கியவர்களாக தமது நாடுகளை வந்தடைந்தனர். தேசியவாதத்தின் முன்னோடிகளாக மாறினர். மேற்கின் நாவின் பேசும் பிரதான மு:.ப்திகளாக மாறினர்.

குர்ஆனிய வசனங்களுக்கு தப்பும் தவறுமாக விளக்கமளித்தனர். காலணித்து சக்திகளின் கைக் கூலிகளாகவும், கோடாரிக்க காம்புகளாகவும் மாறினர். முஸ்லிம் நாடுகளின் வளங்கள் சூரையாடப்பட்டு அவற்றை வறுமைக்கு இட்டுச் சென்றனர்.

இவ்வாறான பல பாதகமான நிலைக்கு முஸ்லிம் தேசங்களை அழிவின் விழும்பில் நிறுத்திய தேசியவாதம் பற்றியும், அதன் பின்னிணி பற்றியும், அதை ஒழித்து மீண்டும் இஸ்லாமிய சகோதரத்துவத்தின் ஊடாக இஸ்லாமிய கிலா.்.பா அடைவதற்கு அறிஞர்கள் ஆற்றிய பணிகள் பற்றியும் “***18-19- ம் நூற்றாண்டுகளில் முஸ்லிம்களின் சமூக சமய பொருளாதார நிலைகளை விளக்கி சேர் செய்யத் அஹ்மத்கான், இமாம் ஹஸனுல் பன்னா ஆகியோரின் சீர் திருத்தப்பணிகளை ஆராய்க!*** என்ற ஆய்வுத் தலைப்பின் ஊடாக பின்வரும் தலைப்புக்களின் அது பற்றிப் பேசப்படுகின்றது.

- ✔ ***18,19 ம் நூற்றாண்டில் முஸ்லிம்களின் சமூக, சமய பொருளாதார நிலை***
- ✔ ***தேசியவாதத்தின் பிறப்பு மற்றும் அதன் தோற்றப் பின்னணி***
- ✔ ***இஸ்லாம் தேசியவாதத்தை அங்கீகரிக்கின்றதா?***
- ✔ ***தேசியவாத சிந்தனை இஸ்லாமிய கிலா.்.பத்தினுள் எவ்வாறு ஊடுருவியது?***
- ✔ ***தேசியவாத்தின் சாதகபாதகங்கள்***
- ✔ ***சேர் செய்யத் அஹ்மத்கான் வாழ்வும் சீர் தித்தப்பணிகளும்***
- ✔ ***இமாம் ஹஸனுல் பன்னா வாழ்வும் சீர் திருத்தப்பணிகளும்***
- ✔ ***முடிவுரை***
- ✔ ***உஸாத்துணைகள்***

***யாஅலல்ாஹ்! உனது கோபத்தை விட உன்கருணையும், உன் தண்டனையை விட உன் மன்னிப்பும் உன் அடியார்கள் பக்கம் நெருக்கமானது என்பதை நாண் உணர்கின்றேன்.***

✔ ***18,19 ம் நூற்றாண்டில் முஸ்லிம்களின் சமூக, சமய பொருளாதார நிலை***

18, 19 ம் நூற்றாண்டில் முஸ்லிம் உலகின் நிலை அவ்வளவு ஆரோக்கியமானதாக இருக்கவில்லை. அறிவியல், சமய, சமூக நிலை பாரிய வீழ்ச்சியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது.

19-ம் நூற்றாண்டை வர்ணிக்கின்ற வரலாற்று ஆய்வாளர்கள் **عصر القوميات இனவாத நூற்றாண்டு என வர்ணித்துள்ளனர்.** அந்த அளவு இனவாதம் ஐரோப்பியர் மத்தியில் தலைவிரித்தாடியது.

முஸ்லிம் உலகை இனவாதமும், தேசியவாதமும் ஆட்கொண்டு இஸ்லாமிய கிலா∴பத்திற்கு எதிராக விதைக்கப்பட்ட தேசியவாத சிந்தனையால் உஸ்மானிய சாம்ராஜ்யம் வீழ்ச்சியை நோக்கி நகர ஆரம்பித்த காலம்.

*“இக்கால கட்டத்தில் அரபு பிரதேசங்களில் இரு பிரதான அரபு இயக்கங்கள் தோற்றம் பெற்றன. ஒன்று இனவாத அடிப்படையில் தோற்றம் பெற்ற அமைப்பு. அது இஸ்லாமிய கிலா∴பத்தை வீழ்த்தி, அடியோடு அழித்துவிட விரும்பியது. அதற்கு இனவாதக்கோஷங்களும், தேசியவாதக் கூப்பாடுகளும் பயன்படுத்தப்பட்டன. மற்ற வகையினர். இஸ்மரியத்தூதை அரபு மக்கள் சுமந்தவர்கள், இஸ்லாமிய தலைமைத்துவத்திற்கும், அனைத்து பகுதிகளையும் ஆட்சி செய்யவும் அவர்கள் தகுதியானவர்கள் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்” (1)*

“பிரான்ஸின் ஆக்கிரிமிப்பிற்கு உட்பட்ட எகிப்து, சிரியா போன்ற அரபு பிரதேசங்களில் ஆங்கிலய, மற்றும் இத்தாலியக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. அவை கல்வியை போதிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. மாற்றமாக அரபு மொழியை இல்லாதொழிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன” (1)

“முஸ்லிம்களாக வாழ்ந்து வந்த வட ஆபிரிக்கா மக்கள் மத்தியில் “ நீங்கள் இஸ்லாமிய வெற்றியின் பின்னால் இஸ்லாத்தில் இணைந்தவர்கள்தானே! வெண்டால், ரோமர்கள், கிரேக்கர்கள் போல அவர்களும் இங்கு பிரவேசித்தார்கள். உங்களுக்கும் அரபு மொழிக்கும் இடையில் என்னதான் தொடர்பு? ஆபிரிக்க மக்கள் பர்பர் இனத்தவர்கள் அல்லவா? என்ற கருத்து காலணித்து சிந்தனை வாதிகளால் முதலாவதாக மொரோக்கோ, லிபியா போன்ற பிரதேசங்களில் விதைக்கபட்டது. பின்னர் எகிப்தை நோக்கி தமது கவனத்தை திருப்பி காலணித்து சக்திகள் நீங்கள் பரம்பரையில் பேசி வந்த மொழி அரபு அல்ல. இது ∴பிர்அவ்ன்கள் ஆட்சி புரிந்து வந்த நகரமாச்சே! உங்களுக்கும் அரபு மொழிக்கும் என்ன தொடர்பு? இங்குதானே புராதன பிரமிட்டுக்கள், அகழ்வு ஆராய்ச்சிகள் எல்லாம் நடை பெற்றுள்ளன. எகிப்து பண்டைய நாகரீகத்தின் நகராமாச்சே (2) என்றெல்லாம் மக்கள் மத்தியில் பரப்பி இஸ்லாமி சிந்தனையை வேரறுக்கப் படபாத பட்டனர்.

------------------------

**1- مجلة الجامعة الإسلامية بالمدينة المنورة - (3 / 271)**

**2- علم واحد وعشرون نجمة - (1 / 36)**

**3- المصدر السابق –ص-37**

## சமய நிலை

இஸ்லாமிய உலகின் சமய நிலை அவ்வளவு திருப்திகரமானதாக இருக்கவில்லை. அபுல் ஹஸன் அலி நத்வி இவ்வாறு குறிப்பிடுகின்றார். " இஸ்லாமிய உலகில் பரவலாகக் காணப்பட்ட அறிவு மற்றும் பண்பாட்டு வீழ்ச்சியுடன் மார்க்க விரதோதச் செயல்பாடுகள்- பித்அத்துக்கள் பரவிக்காணப்பட்து. (1)

ஹிஜ்ரி பன்னிரெண்டாம் (கி.பி 18ம் நூற்றாண்டு) பற்றிக்குறிப்பிடும் முஸ்லிம் ஆய்வாளர் "

(2) كانت الأمة الإسلامية في غاية الضعف والتمزق " இஸ்லாமி சமூகம் பலவீனம், பிளவு என்பதில் உச்ச நிலையில் காணப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். (2)

முஹம்மத் பின் அப்தில் வஹ்ஹாப் என்ற அறிஞரின் காலம் பற்றி எடுத்தெழுதும் இஸ்லாமிய ஆய்வாளர் ஒருவர் முஸ்லிம் உலகின் சமய வீழ்ச்சி பற்றி இவ்வாறு பதிவு செய்கின்றார்.

فقد كانت الفترة التي عاصرها (مطلع القرن الثاني عشر الهجري) فترة انتكاس في الفطر ، وارتكاس في العقائد ؛ ذلك أن مظاهر الشرك الجلي قد ظهرت في مواطن كثيرة من بلاد الإسلام ، وتمثل هذا الشرك في تحول فئام من الناس إلى عبادة الأولياء والصالحين أمواتاً وأحياءً ؛ فكل ما يجب أن يصرف لله تعالى من العبادات القلبية والعملية ، كان يصرفها أولئك للمقبورين بزعم أنهم كانوا صالحين ، فاستغاثوا بهم في النوازل ونذروا وطافوا وتمسحوا بآثارهم ومدافنهم ، بل تعدى الأمر إلى الشرك بالجمادات كالأحجار والأشجار (3)

அவர் வாழ்ந்த காலம் இயற்கை நிலைமாறிய, பின்னோக்கிச் சென்ற கால கட்டமாகவும், அகீதாவில் வீழ்ச்சியை எட்டியதாகவும் இருந்தது. இஸ்லாமிய நாடுகள் பெரும்பாலானவைகளில் தெளிவான இணைவைத்தல் வெளிப்படையாகக் காணப்பட்டது. இந்த நிலை மனிதர்களில் ஒரு குழுவினர் அவ்லியாக்கள், நல்லடியார்கள் என் போரை உயிரோடும், அவர்கள் மரணித்த நிலையிலும் வணங்கும் நிலைக்கு இட்டுச் சென்றது. இதயத்துடன் தொடர்பான, செயல் சார்ந்த அல்லாஹ்வுக்கு செய்யப்பட வேண்டிய வணக்கவழிபாடுகள் அனைத்தும் மண்ணறைவாசிகளான அவ்லியாக்கள் பேரில் அரங்கேற்றப்பட்டன. துன்பங்களின் போது அவர்களைக் கொண்டு உதவி வேண்டினர். நேர்ச்சை செய்தனர். மண்ணறைகளைச் சுற்றி வலம் வந்தனர். அவர்களின் அடிச்சுவடுகள், அடக்கஸ்தலங்களில் தடாவி ஆசிர்வாதம் பெற்றனர். மட்டுமின்றி கற்கள், மரங்களைக் கொண்டு இணைவைக்கும் நிலைக்கு அந்த இணைவதைத்தல் இட்டுச் சென்றது. (3)

இது முஸ்லிம் உலகில் காணப்பட்ட சமய வீழ்ச்சியை படம் பிடித்துக் காட்டுகின்றது. இந்த நிலையில் சவூதி அரேபியாவில் மாத்திரமல்ல, ஒட்டுமொத்தி இஸ்லாமிய உலகின் நிலையாகும். சமய பண்பாட்டு ரீதியான பாரிய வீழ்ச்சியில் முஸ்லிம் உலகு சுருண்டு கிடந்தது.

உஸ்மானியப் பேரசிசின் வீழ்ச்சியுடன் இஸ்லாமிய சமூகத்தில் பல சிந்தனைப்பிரவுகள் தோற்றம் பெறத் தொடங்கின. அரச அறிஞர்கள், அஸ்ஹர் அறிஞர்கள் என்ற இரு குழுக்களாக அறிஞர்கள் மாறினர். உஸ்மானிய அரச அறிஞர்கள் பண்டைய பாரம்பரிய முறைக்கு மாற்றமான மாற்றங்களையும், சீர் திருத்தங்களையும் எதிர்த்தனர். சீர் திருத்தவாதிகளை முர்தத் என்ற நிலையில் பார்த்தனர்.

**பொருளாதார நிலை பற்றி எடுத்துக் கொண்டால் ஆங்கிலயர்கள் முஸ்லிம் நாடுகளின் வளங்களை பிரித்துக் கொண்ட காலமாக கொள்ளப்படுகின்றது.**

--------------------

1- **الإمام السرهندي لأبي الحسن الندوي-ص23**

2- **(مجلة البيان - (15 / 30)**   3- **مجلة البيان - (131 / 62)**

## அரசியல் நிலை

கி.பி 18ம் நூற்றாண்டில் மத்திய கிழக்கில் மூன்று முக்கிய அரசுகள் காணப்பட்டன. 1- உஸ்மானியப் பேரரசு, 2- பாரஸீகத்தில் ஸ.்.பவிக்கள்- ஷீஆக்கள்- ஆட்சி. 3- இந்தியாவில் மங்கோலியர் ஆட்சி.

**-1-உஸ்மானியப் பேரரசு**: இதன் மன்னர்கள் அரசில் செல்வாக்கு இழந்த பலவீனமான நிலையில் காணப்பட்டனர். அவர்களின் அமைச்சர்கள், அரச நிருவாகம் பற்றி அறிவற்ற படைத்தளபதிகள் கரங்களில் ஆட்சி அதிகாரம் காணப்பட்டது. நிருவாகத்துறைகளில் நிருவாகம் சீர்குலைந்து காணப்பட்டது. இவர்களின் முழு நோக்கமும் மாநிலிங்ளில் இருந்து பணங்களைக் கறப்பதாக இருந்தது. இராணுவத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி நிலைமையும் இன்னும் மோசமாக்கியது. உஸ்மானி அரசை ஐரோப்பா அனைத்து பகுதிளாலும் சுற்றவழைத்துக் கொண்டது. உஸ்மானி அரசின் வளங்கள் பங்கீடு பற்றிய சர்ச்சைப் புகை மூண்டது. அதன் வளங்கள் மீது பேராசை கொண்ட நாடுகள் அவற்றைப் பங்கீடு செய்வதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கையை வரலாற்று ஆய்வாளர்கள் **( المسألة الشرقية) கிழக்குப் பிராந்திய விவகாரம்** என்று வர்ணித்துள்ளனர்.

மேற்கு இஸ்லாமிய மொரோக்கோவின் நிலை அதன் கிழக்கு பிராந்தியைத்தை விட சிறந்தாகவும் இருக்க வில்லை. துனிசியா, அல்ஜீரியா போன்ற நாடுகள் பலவீனமான உஸ்மானிய அரசின் ஆட்சியின் கீழ் இருந்தன. அரபுக்கள், பர்பர்கள் மத்தியில் உட்பூசல்கள் காணப்பட்டது. இஸ்பைன், போர்த்துக்கல் போன்ற நாடுகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் இந்த அரசு காணப்பட்டது.

***2- பாரஸீகத்தில் ஸ.்.பவிக்கள்- ஷீஆக்கள்- ஆட்சி (1500-1722)*** ஸபவிக்கள் ஆட்சி கி.பி. 1722 ல் முடிவுற்றதைத் தொடர்ந்து ஆப்கானியர் ஆட்சிக்கு வந்தனர். நாதிர்ஷாஹ் என்பவர் கி.பி.1729 ல் அதனை முடிவுக்கு கொண்டு வந்தார். அவர் தன்னை ஒரு அரசராக முடிசூடிக் கொண்டார். பின்னர் தனது அதிகாரத்தை அரபி வளைகுடாவில் இருந்து இந்து தேசம்வரை விரிவாக்கிச் சென்றார். அவர் கி.பி 1747ல் கொலை செய்யப்பட்டார். அவரது கொலையுடன் கி.பி 1788ல் காஜாரிய்யர் ஆட்சி உருவாகும் வரை பாரஸீகத்தில் நிலைமை மோசமடைந்திருந்தது.

## *-3- இந்தியாவில் மங்கோலியர் ஆட்சி.*

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் அங்கு பதட்டமான சூழ் நிலை உருவானது. உள்நாட்டுப்போர்களின் ஆடுகளமாக மாறியது. இது ஆங்கிலய கிழக்குக் கம்பனிகளின் வருகையை இலகுபடுத்திக் கொடுத்தது. இது கி.பி.1857ல் சிப்பாய்க்கலவரத்துடன் சாத்தியமானது. இது முஸ்லிம் உலகின் அரசியல் நிலை பற்றிய சுருக்கமாகும்.

-----------------------

**1- مجلة البحوث الإسلامية - (21 / 116-118)**

# தேசியவாதத்தின் பிறப்பு மற்றும் அதன் தோற்றப் பின்னணி

**கி**.பி பத்தொன்பதாம் நூற்றாண்டை வரலாற்று ஆய்வாளர்கள் கலைச் சொற்கள் அல்லது பரிபாசைகள் பிறந்த நூற்றாண்டு என்று வர்ணிக்கின்றார்கள். அந்த வகையில் தேசியவாதத்தின் பிறப்பும் தோற்றமும் பற்றி பின்னணி இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. தேசியவாதத்தை அரபியில் **(الوطنية)** என்றும் இனவாதத்தை القومية என்றும் அழைக்கப்படுகின்றது.

இது பற்றி விளக்கம் தரும் அறிஞர் முஹம்மத் குதுப் அவர்கள் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள். " ஒரு தேசத்தவர்கள் தாம் ஒரு தேசிய இனத்தவர் என்ற உணர்வை உள்வாங்கிக் கொள்வதையும், அதற்காகப் பிடிப்புடன் இருப்பதையும் குறிக்கும். அவர்கள் சார்ந்துள்ள இனம் எதுவாக இருந்தாலும் சரியே! மொழி, மதம், நிறம் என்பதெல்லாம் இங்கு பார்க்கப்படுவதில்லை. (1)

**மதீனா இஸ்லாமி பல்கலைக் கழகத்தின் ஆய்வுச் சஞ்சிகையில் இவ்வாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.**

"இவ்வாறான சொல்லாடல்கள் இஸ்லாத்திற்கு புதியதாகும். இஸ்லாம் கொள்கைக்கு இணங்கிச் செல்லும் கோட்பாடாகும். அது மண், நிலம், குலம், கோத்திரம் என்ற எந்த ஒன்றின் பக்கமும் இணைக்கப்பட முடியாததாகும். இவ்வாறான வார்த்தைகள் நமது கலாசாரத்தில் ஐரோப்பிய சிந்தனையின் வெளிப்பாடாக உட்புகுந்தவையாகும். குறிப்பாக பிரான்ஸ், மற்றும் இங்கிலாந்தில் இருந்து வந்த வழக்காகும்…" "இஸ்லாத்தில் (الدار/ دار) என்ற சொல்லாடல் குர்ஆனில் இடம் பெற்றுள்ளது. இஸ்லாமி ஆட்சித் தலைநகர் மதீனா பற்றி இடம் பெறும் வசனத்தில் இந்தச் சொல் இடம் பெறுவதுடன், அங்குள்ள மக்கள் மக்கா மக்களை ஆதரித்தது பற்றிக் குறிப்பிடுகின்றது. இந்த வசனத்தில் தேசியவாதம் முழுமையாக மறுதலிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இஸ்லாமியப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் தேசிய இனத்தவர் என்று அழைக்கப்படுவதில்லை. மாற்றமாக முஸ்லிம்கள் என்ற பெயர் கொண்டுதான் அழைக்கப்படுகின்றனர். (2)

## القومية\என்பதன் விளக்கம்

ஒரு மொழிபேசும் ஒரே இனத்தவர் அவர்களின் வாழ்விடங்கள், பிரதேசங்கள் வேறுபட்டிருந்தாலும் ஒரு கொள்கையின் கீழ் ஐக்கியத்துடன் இருப்பதாகும். (3) இது இறுதியில் தேசியவாதத்தை நோக்கியே நகர்கின்றது. தேசியவாதத்தில் ஒரு தேசம் என்பது போதிக்கப்படுகின்றது. கவ்மிய்யா என்பதில் வேறுபட்ட தேசத்தில் வாழ்ந்தாலும் ஒரு குழுவின் பக்கம் இணைந்திருப்பது போதிக்கப்படுகின்றது.

----------------------

-1- فرق معاصرة لمحمد قطب ص 554

(2 ) مجلة الجامعة الإسلامية بالمدينة المنورة (3 / 3) 3-فرق معاصرة لمحمد قطب: ص 554

பல்வேறுபட்ட இனத்தவர்கள் ஒரு சிந்தனையின் கீழ் குல, மொழி, பிரதேச வாதங்களை மறந்து சகோதரர்களாக வாழ்வதுதான் இஸ்லாமிய சிந்தனையாகும். ஆனால் தேசியவாதம், இனவாதம் இரண்டும் ஒருவர் வாழும் பிரதேசத்தையும், ஒரு இனத்தினரையும் அடிப்படையாகக் கொண்டாகும்.

“மேற்படி இரு சிந்தனைகளும் ஐரோப்பாவில் காணப்பட்ட சிந்தனைகளாகும். அங்கிருந்துதான் முஸ்லிம் நாடுகளுக்கு இறக்குமதி செய்யப்பட்டன. கி.பி 325-ல் மன்னன் கொஸ்தான்தீன் கிரிஸ்தவத்தை ஏற்று மக்களை கிரிஸ்தவ மதத்தில் கீழ் ஒன்றிணைக்கின்ற வரை ஒன்றுபடல் என்பது எட்டாக்கனியாகத்தான் இருந்தது. இருப்பினும் கத்தோலிக்கர்கள், புரோடஸ்டாண்டினர் என்ற பிரிவை அவனால் ஒழிக்கமுடியவில்லை” (1)

**இருந்தும் நிரம், தேசம், மொழி ஆகியவற்றிகு அப்பால் இஸ்லாம் மனிதர்களை ஒன்றிணைத்தது போன்றதொரு நிலையை இதன் பின்னரும் ஐரோப்பிய வரலாற்றில் நிகழவில்லை என்பதுதான் உண்மை.**

இனவாத சிந்தனை முதல்முதலில் ஜேர்மனியில் தோற்றம் பெற்றது. ஜேர்மனியர் தம்மை பிற இனத்தவர்களில் இருந்து வேறுபடுத்தியே நோக்கினர். இது அங்கிருந்துதான் பிறநாடுகளுக்கு அந்த ஊடுருவியது.

“நான் நெருப்பால் படைக்கப்பட்டவன், ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர். அதனால் நான் அவரை விட சிறந்தவன். மண்ணால் படைக்கப்பட்ட ஆதத்திற்கு நான் சிரம்பணிவேனாக என ஷைதான் அல்லாஹ்விடம் கிளப்பி இனவாத சிந்தனையை ஒத்தாக இந்த சிந்னை இருக்கின்றது. (2)

இந்த சிந்தனை மதக்கோட்பாட்டை மறந்த சிந்தனையாகும். மனிதர்களை சமயத்தில் இருந்து பிரித்தெடுக்கின்ற பாரிய சூழ்ச்சியாகும். ஒருவர் பேசும் மொழி அரபு என்றால் அவர் எந் மதம் சார்ந்தவம் என்பது இங்கு முக்கியம் அல்ல. அவர் அரபிகளுக்காக குரல் கொடுத்தல் என்ற சிந்தனைப் போக்கு இங்கு உருவாக்கப்படுகின்றது. அவ்வாறே ஒருவர் வசிக்கும் பிரதேசம் இந்தியா என்றால் இந்தியன் என்ற சிந்தனை இங்கு உருவாக்கப்படுகின்றது. இதனால் தேசம் கடந்த நேசமும், நிரம், மொழி கடந்த பாசமும் கொள்ள முடியாத நிலை தோன்றும். இஸ்லாம் இந்த சிந்தனையை முழுமையாக எதிர்க்கின்றது. இது பற்றி கருத்து வெளியிடும் அஷ்ஷைக் அப்துல்லாஹ் பின் பாஸ் அவர்கள்:

**الدعوة إلى القومية العربية أحدثها الغربيون من النصارى لمحاربة الإسلام والقضاء عليه في داره بزخرف من القول ، وأنواع من الخيال ، وأساليب من الخداع ، فاعتنقها كثير من العرب من أعداء الإسلام ، واغتر بها كثير من الأغمار ومن قلدهم من الجهال ، وفرح بذلك أرباب الإلحاد وخصوم الإسلام في كل مكان**

இனவாத சிந்தனை, அலங்கார வார்த்தைகள், கற்பனைகள், தந்திரமானவழிகள் மூலம் இஸ்லாத்தை முழுமையாக இல்லாதொழிப்பதற்காக மேற்கத்தையர்கள் உருவாக்கியதாகும். இஸ்லாமிய எதிரகளான அரபுக்கள் பலர் இதனை ஏற்றுக் கொண்டனர். அவர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றிய அறிவீனர்கள் இதைக் கொண்டு ஏமாறினர். எல்லா இடங்களிலும் உள்ள நாஸ்தீகர்களும், இஸ்லாத்தின் எதிரிகளும் ஆனந்தம் அடைந்தனர். (3)

------------------------

**1- فرق معاصرة لمحمد قطب 559 مجلة الجامعة الإسلامية بالمدينة المنورة – (3 / 5) نقد القومية العربية على ضوء الإسلام والواقع – (1 / 13)**

## தேசியவாதத்தின் பிறப்பும் அதன் தோற்றப் பின்னணியும்

**தேசியவாத இனவாத சிந்தனை முஸ்லிம்கள் மத்தியில் எவ்வாறு தோன்றியது என ஆய்வு செய்கின்ற போது** தேசியவாத இனவாத சிந்தனை லெபனானைச் சேர்ந்த கிரிஸ்தவ மதப்போதகர்களான அமெரிக்க ஆங்கிலே கிரிஸ்த மதப்பிரச்சாரகளால் அரபு மொழியின் பெயரால் முதன்முதலில் முன்னெடுக்கப்பட்டதாகவும், பின்னர் அது முஸ்லிம்கள் மத்தியில் விதைக்கப்பட்டதாகவும் அங்கிருந்து அந்த சிந்தனை எகிப்துக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதில் இப்ராஹீம் அல்யாஸ்ஜீ, அவரது தந்தை அல்யாஸ்ஜீ ஆகிய இரு கிரிஸ்தவர்களும் முன்னிலையில் காணப்பட்டதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது. (1)

முஸ்லிம் பிரதேசங்களை காலணித்துவப்படுத்திய நாடுகள் அவர்களை கிரிஸ்தவமயமாக்கல் செய்யும் வழிமுறைகளில் ஒன்றாக தேசியவாதம் இருந்தது என அப்துர்ரஹ்மான் ஹப்னகா அல்மைதானி சுட்டிக்காட்டுகின்றார். (2)

*முஹம்மத் குதுப் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:* பிரான்ஸ் மற்றும் இஸ்பைன் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் கி.பி.(1494-2559) வரையான 65 ஆண்டுகாலப் போர்கள் இத்தாலியத் தீவுகளை தம்வசமாக்கி, அதில் தமது பிராந்திய செல்வாக்கை நிலை நிறுத்திக் கொள்வதற்கான நடவடிக்கையாக இருந்தன. பின்னர் அது ஐரோப்பா முழுவதும் காட்டுத்தீயாய்ப் பரவியது. இதற்காக பல்லாயிரக்கணக்கான உயிர்களை ஐரோப்பா பலிகொடுத்தது. இந்தக்காலங்களில் தேசியவாதம் இந்த நாடுகளின் நலன்களைப் பிரதானப்படுத்தியாக இருந்தது. இந்த நிலையினை மாற்றியமைத்து மக்களின் நலனுக்கான ஆக்கிரிமித்தல் என்ற மாயை அறிமுகப்படுத்தி முஸ்லிம் உலகை ஆக்கிரிமித்தது. 1939-1945 வரையில் நடை பெற்ற இரண்டாம் உலகப் போரில் 40 மில்லியன் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டார்கள். இந்த நிலை மாற்றியமைக்கப்படுவதும், நாகரீக அறிமுகம் என்ற பெயரில் முஸ்லிம் நாடுகள் ஆக்கரிமிக்கப்படுவதையும் நோக்கமாகக் கொண்டு இப்பிரதேசத்தில் தேசியவாத சிந்தனைகள் விதைக்கப்பட்டது. அதற்காக திட்ட ஒரு இயக்கப்பட்டனர். அவர்கள் இஸ்லாமிய அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி கிளர்ச்சியாளர்களாக பயிற்றுவிக்கப்பட்டனர். முஸ்லிம் உலகின் காலணித்து சக்திகைள எதிர்த்துப் போராடும் இஸ்லாமிய போராளிக் குழுக்களின் போராட்ட சிந்தனையை மாற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட முக்கிய முதலாவது ஆயுதமாக தேசியவாதம் இருந்தது. ஸஃத் ஸ.லூல் என்பவர் எகிப்தில் தேசியவாதத்தை ஆதரித்து ஜிஹாதிய சிந்தனையை மறுத்ததை உதாரணமாகக் கொள்ளலாம். இரண்டாவது நோக்கமாக ஜிஹாதிய குழுக்களை அரசியல் குழுக்களாக மாற்றுவது, பின்னர் இவ்விரு குழுக்களக்கும் இடையில் சர்ச்சையை உண்டாக்கி விடுவது, மூன்றாவது நோக்கம் மேற்கின் சிந்தனையைப் பரப்புவது. இப்படித்தான் முஸ்லிம் உலகுக்கு தேசியவாத சிந்தனை இறக்குமதி செய்யப்பட்டது. இந்த தேசியவாத சிந்தனை முஸ்லிம் உலகில் கசப்பான அசிங்கமான பல விளைவுகளை ஏற்படுத்தி இருப்பதை இன்றும் அவதானிக்க முடிகின்றது. (3)

--------------------

1- الاختلاف في العمل الإسلامي الأسباب والآثار لناصر العمر- (1 / 63)

2- أجنحة المكر الثلاثة لعبد الرحمن حبنكة الميداني- (1/ 227)

3- مختصر من كتاب فرق معاصرة لمحمد قطب ص 564- 580

## இஸ்லாம் தேசியவாதத்தை அங்கீகரிக்கின்றதா ?

இஸ்லாம் இன மத மொழி அடிப்படையில் மனிதர்களை நோக்குவதை விட்டுவிட்டு அகீதா என்ற அடிப்படையில் நோக்கும் மார்க்கமாகும். அது சாதியம் தலைவிரித்தாடி, குலவெறியும் கோத்திர வெறியும் மனிதர்களை பிரித்துக்காட்டும் பிரிகோடாக தாண்டவமாடிக் கொண்டிருந்த நிலையில் முஹம்மத் நபி மூலமாக இஸ்லாம் இறுதியாக அறிமுகப்படுத்தப்பட்டது.

அவர்கள் குரைஷயக்குலத்தில் பிறந்தவராக இருந்தாலும் கறுப்பர், வெள்ளையர், குரைஷியர், குரைஷி அல்லாதவர், அடிமை, எஜமான், ஏழை, செல்வந்தர் என்ற வித்தியாசமின்றி மக்களை அல்லாஹ்வின் அடிமைகள் என்ற பார்வையில் பார்த்தார்கள்.

அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட சகோதரர்கள் என்றுதான் அவர்களை நோக்கினார்கள். அவர்களின் இந்த அழைப்பு முறை மக்களை வெகுவாகக் கவர்ந்த காரணத்தால் இஸ்லாத்தில் சாரை சாரையான நுழைந்தார்கள்.

அடிமைகளை விடுதலை செய்தல், அவர்களை சமமாக நடத்துதல், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற வழிமுறைகளை அனைத்து மக்கள் மத்திலும் பாகாபடின்றி நடைமுறைப்படுத்தியதன் விளைவாக உலகம் இவரை முன்மாதிரிமிக்கத்தலைவர் எனப் போற்றியது.

ரோம் தேசத்தவரான அடிபமை சுஹைப் என்பவர், பாரஸீகத்தைச் சேர்ந்த சல்மான, ஹபஷாவைச் சேர்ந்த கறுப்பு நிர அடிமை பிலால், மக்கா முஹாஜிர்கள், மதீனா முஹாஜிர்கள் ஆகியோர் வெளிநாட்டவர்கள் என்றபார்வையில் பார்க்கப்படவில்லை. மாற்றமாக முஸ்லிம்கள், ஜமாஅத்துல் முஸ்லிமீன் என்ற பார்வையில்தான் பார்க்கப்பட்டார்கள்.

அவர்கள் இஸ்லாத்தில் இணைவதற்கு முன்னால் இருந்த குல, கோத்திர வாதங்களைக் கிளறுவதை கடுமையாக எச்சரிக்கை செய்திருந்தார்கள். அபூதர் அல்கிபாரி என்ற நபித்தோழர் கறுப்பு அடிமை பிலால் என்ற சக நண்பரை அவரது தாயை இழுத்துப் பேசித்திட்டி விடுகின்றார். அது பற்றி முறைப்பாடு செய்யப்பட்ட போது அவரிடம்:

**يَا أَبَا ذَرٍّ أَعَيَّرْتَهُ بِأُمِّهِ إِنَّكَ امْرُؤٌ فِيكَ جَاهِلِيَّةٌ إِخْوَانُكُمْ خَوَلُكُمْ جَعَلَهُمْ اللَّهُ تَحْتَ أَيْدِيكُمْ فَمَنْ كَانَ أَخُوهُ تَحْتَ يَدِهِ فَلْيُطْعِمْهُ مِمَّا يَأْكُلُ وَلْيُلْبِسْهُ مِمَّا يَلْبَسُ وَلَا تُكَلِّفُوهُمْ مَا يَغْلِبُهُمْ فَإِنْ كَلَّفْتُمُوهُمْ فَأَعِينُوهُمْ**

அபூதர் நீ அவரது தாயை இழுத்து ஏசினாயோ? நிச்சமயாக அறியாமைக்காலப் பண்பாடுள்ள மனிதன். உங்கள் அடிமைகள் சகோதரர்கள். அல்லாஹ் அவர்களை உங்களின் கீழ் ஆக்கி தந்துள்ளான். எனவே யார் ஒரு சகோதரரை தனக்கு கீழ் வைத்திருக்கின்றாரோ அவர் உண்ணுவதில் இருந்து உண்ணக் கொடுக்கட்டும், அவர் உடுத்துவதில் இருந்து அவருக்கு ஆடை அணிவிக்கட்டும், அவர்களின் சக்தி அப்பாற்பட்ட பணிகளை அவர்கள் மீது சுமத்தாதீர்கள். அவ்வாறு சுமத்தினால் நீங்களும் அவர்களுக்கு உதவிடுங்கள் (1) எனக் கூறினார்கள். ------------------

1- **صحيح البخاري رقم الحديث: 3140 بَاب الْمَعَاصِي مِنْ أَمْرِ الْجَاهِلِيَّةِ وَلَا يُكَفَّرُ صَاحِبُهَا بِارْتِكَابِهَا إِلَّا بِالشِّرْكِ**

இறுதித்தூதர் முஹம்மத நபி அவர்கள் அர∴பாத் தின உரையில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தமை சிந்திக்க வேண்டியதாகும்.

**أَلَا كُلُّ شَيْءٍ مِنْ أَمْرِ الْجَاهِلِيَّةِ تَحْتَ قَدَمَيَّ مَوْضُوعٌ وَدِمَاءُ الْجَاهِلِيَّةِ مَوْضُوعَةٌ (1)**

**ஜாஹிலிய்யக்கால அனைத்துப் பழக்கவழக்கங்களும் எனது இரண்டு பாதங ்களின் கீழ் புதைக்கப்படுகின்றது. ஜாஹிலிய்யக் காலத்தில் (தீர்க்கப்பட்டாத) அனைத்து கொலை தொடர்பான விவகாரங்களும் புதைக்கப்படுகின்றன.** *(1)* அதாவது ஜாஹிலிய்யா காலத்தில் எனது தந்தையை இவர் கொலை செய்தார் அதற்காகப் பழிதீர்க்க வேண்டும் என்ற நடைமுறையாகும்

இஸ்லாமிய மார்க்கத்தை துறைபோகக் கற்ற முஸ்லிம் அறிஞர்கள் யாரும் தேசியவாதத்தை ஆதரிக்கவோ, அதன் பக்கம் மக்களை அழைக்கவே கிடையாது.

மாற்றமாக ஐரோப்பாவின் கருத்தாலும் போக்காலும் கவரப்பட்ட அரைவேக்காடுகள்தான் அதைச் சரி கண்டனர். முஸ்லிம் உலகில் அதைப்பரப்பினர், மக்களை அதன் பக்கம் அழைத்தனர். இவர்களில் தாஹா ஹுஸைன், ரி∴பாஆ தஹ்தாவி, காஸிம் அமீன், அஹ்மத் லுத்∴பி செய்யித், ஸ∴த் ஸ∴லூல் போன்ற காலணித்துவ சிந்தனைக்கு அடிமைப்பட்டவர்கள் தேசியவாதத்தை எகிப்தில் ஆதரித்து வெள்ளையர்களினடம் அடிமைகளாக செயல்பட்டனர். அப்துல்லாஹ் பின் பாஸ் அவர்கள் இது பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

**هي دعوة جاهلية إلحادية يهدف دعاتها إلى محاربة الإسلام ، والتملص من أحكامه وتعاليمه ... (2)**

***இது நாஸ்தீகம் கலந்த ஜாஹிலிய்யா சிந்தனையாகும். அதன் அழைப்பாளர்கள் இஸ்லாத்தை எதிர்த்துப் போரிடுவதையும், அதன் சட்டத்திலும், வழ்காட்டல்களிலும் குறைகூறவதும் நோக்கமாகவும் கொண்டதாகும் (2)***

---

**1- صحيح مسلم 2137 كتاب حجة النبي صلى الله عليه وسلم .**

**2- نقد القومية العربية على ضوء الإسلام والواقع - (1 / 77)**

***தேசியவாத சிந்தனை இஸ்லாமிய கிலா.்.பத்தினுள் எவ்வாறு ஊடுருவியது?***

இஸ்லாத்திற்கு எதிரிகள் புதியவர் கிடையாது. ஆதம் நபியின் காலம் முதல் இன்றுவரை அவர்கள் இருந்தே வருகின்றனர். இருந்தும் இஸ்லாமிய மார்க்கத்தின் கதிர்வீச்சால் அவர்களின் சதிகள் பொசுங்கிய நிலையில் அசத்தியத்தின் தணல்கள் இன்னும் தீப்பற்றி ஆங்காங்கு எரிகின்றது.

இறுதியாக மக்காவை அடைந்த இஸ்லாமியத் தூது சாதிவேறுபாடுகளால், கோத்திரப்பிளவுகளால் நிரம்பிக்காணப்பட்ட அறியாமைக்கால சமூகத்தை இஸ்லாத்தின் நிழலில் ஐக்கியப்படுத்தியது.

இஸ்லாமிய அரசின் கீழ் வாழ்ந்த மக்கள் ரோம், பாரஸீகம், அபீசீனியா, மக்கா, மதீனா, தாயி.்.ப் என்ற எவ்விதப் பிரதேசவாதமோ, அவ்ஸ், கஸ்ரஜ், அன்ஸார், முஹாஜிர், ஹபஷி என்ற குல போதமோ அற்றவர்களாகவே நடத்தப்பட்டனர். அவர்கள் சகோதரர்களாக, ஒருவரை ஒருவர் நேசிக்கின்ற, விட்டுக்கொடுப்புடன் நடக்கின்ற முன்மாதிரிமிக்க மனிதர்களாக நடத்தப்பட்டனர்.

ஹி. இரண்டாம் ஆண்டில் நபித்துவ ஆட்சி தொடங்கி கி.பி 1924 கள் வரை முஸ்லிம் உலகம் கலீ.்.பாக்களின் கீழ் வழநடத்தப்பட்டு வந்தது. அந்த நிலை 1800 களின் பின் பலவீனம் அடைந்து, 1924 ம் ஆண்டு கிலா.்.பத்தின் வீழ்ச்சியோடு முழுமையாக மாறத் தொங்குகின்றது. கிலா.்.பத்தின் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணியாக துர்க்கிய தேசியவாதம் முன்னணியில் பேசப்படுகின்றது.

“ஹ: 14-ம் கி.பி. 18ம் நூற்றாண்டுடன் இஸ்லாமிய கிலா.்.பத் பலவீனம் அடைந்து ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன், ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகளின் முன்னிலையில் சரணடைந்ததும் அந்த நாடுகள் அதன் வளங்களைப் பங்கிட்டுக் கொள்வதில் குறியாக இருந்தன. இதனை வரலாற்றில் ***“கிழக்குப் பிராந்திய பிரச்சினை”*** என அடையாளப்படுத்துகின்றனர். பின்னர் அந்த நாடுகளின் கைத்தொழில் உற்பத்தி அதிகரித்தது. அதனால் முதலாளித்தும் அவைகளை ஆக்கிரிமித்தது. அதன் விளைவாக தேசிய, இனவாத சிந்தனை இயக்கங்கள் சக்தி பெற்றன. தேசிய உற்பத்தி பொருட்கைள நுகர்வுச் சந்தைகளில் விற்பனை செய்வதில் போட்டிபோட்டக் கொண்டன. அதனால் அவைகளுக்கு மத்தியில் போட்டி மனப்பாண்மை உருவாகியது. இந்நிலையில் பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா ஆகிய நாடுகள் தமக்குள் பகைமை இருந்தும் நெருங்கி உறவாடின. இந்த கட்டத்தில் ஐரோப்பா இரு அணியாகியது. 1914-1919 வரை முதலாவது உலகப் போர் மூண்டது. துர்கி ஜேர்மனுடன் இணைந்து போரிட்டது. அது தோல்வியைத் தழுவியது. முடிவு ஜேர்மன் துர்கியை ஆக்கிரிமித்தது துர்கியின் சுதந்திரம் இஸ்லாமிய கில.்.பத்தை இல்லாதொழித்து விடுதலை பெற்றுக் கொண்டது. (1)

கொஸ்தான்தி நோபிலை தலைமையகமாகக் கொண்டு அரபியர், துர்கியர் என்ற பாகுபாடின்றி நடந்து வந்த இஸ்லாமி ஆட்சி தேசியவாத சிந்தனைக்கு உள்வாங்கப்பட்டு அரபுக்கள். துர்கியர் என்ற விரோத உணர்வைக் கொண்ட ஆட்சியாக மாறியது.

\

----------------------------

1- مجلة الجامعة الإسلامية بالمدينة المنورة - (33 / 434)

2- الكتاب : صفحات من القضية العربية لأحمد الشقيري - (1 / 136)

*அரபு தேசியவாதத்தின் தந்தை எனறு அழைக்கப்படுகின்ற கோலோனில் லோரன்ஸ் பிரித்தானியா உளவுப்பிரிவுக்கு 1916ல் அனுப்பிவைத்த அவரது அறிக்கை ஒன்றில்*

"إن أهدافنا الرئيسة تفتيت الوحدة الإسلامية بدحر الامبراطورية العثمانية وتدميرها ، وإذا عرفنا كيف نعامل العرب فيسبقون في دوامة الفوضى السياسية داخل دويلات صغيرة حاقدة متنافرة غير قابلة للتماسك".

*உஸ்மானியப் பேரசிசின் முதுகில் குத்துவதன் மூலமும், அதை சிதைப்பதன் மூலமும் இஸ்லாமிய சமூகத்தின் ஐக்கியத்தை சுக்குநூறாக்குவது நமது பிரதான நோக்கங்களாகும். அரபுக்களை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதை நாம் அறிவோம். என்றும் ஐக்கியப்படாத சிறு சிறு நாடுகளுக்குள் சதாவும் குரோதத்தோடு இருப்பவர்களாகவும் அரசியல் கொந்தழிப்பில் இருப்பவர்காளகாவும் அவர்கள் முண்டியடித்துக் கொள்வார்கள். இது முஸ்லிம் சமூகத்தில் சாபக்கோட்டை உருவாக்கிய நிகழ்வுகளை தேசியவாதத்தின் மூலம் உருவாக்கியது என்பதை மறுக்க முடியாது. (1)*

ஐரோப்பியரிடம் காணப்பட்ட தேசியவாத நோய் முஸ்லிம்கள் மத்தியில் உஸ்மானியர் ஆட்சியின் போது அரபு தேசியவாதத்தை முன் நிறுத்தியே தோற்றம் பெற்றுள்ளது என்பதை வரலாற்றில் காணமுடிகின்றது. இது பற்றி அறிஞர் அபுல்ஹஸன் நத்வி இவ்வாறு குறிப்பிடுகின்றார்:
துர்கியில் தோரானிய்ய வாதம் தலைதூக்கியது. துர்கிய மக்களாகிய நாம் மங்கோலியப் பரம்பரையில் வந்தவர்கள், இஸ்லாம் நமக்கு இடையில் வந்து சேர்ந்தது, அது துர்கயர்களுக்கு சரிப்பட்டுவராது. எனவே நாம் நமது ஆரம்ப பரம்பரையினர் மாரக்கத்தின் பக்கம் மீள்வதே சரியாது. இந்த சிந்தனையை கோப்அலப் என்ற துர்கிய இலக்கியவாதிதான் முன்வைத்திருந்தார். அவர் இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த துர்கியர்களின் அரசியல் பாரம்பரியத்தோடு நவீன துர்கியர்களை இணைக்க விரும்பினார். அரபுக்கள் கொண்டு வந்த இஸ்லாம் துர்கியருக்கு சரிவரப்போவதில்லை, அதனால் நமது இயல்புக்கு அமைவாக அதைச் சீரமைப்பது அவசியம் என்றார் எனத் தொடரும் அறிஞர் நத்வி அவர்கள் அரபியரை விட துர்கியர் விவகாரங்களை அதிகம் அறிந்து வைத்திருந்த ஷகீப் அர்ஷலானின் கருத்தை பின்வருமாறு பதிவு செய்கின்றார்கள்: “துர்கியரின் உஸ்மானியர் வாதம் பேசுகின்ற குழுவுக்கு மாற்றமாக தோரானிய்யா என்ற குழு காணப்பட்டது. அதில் கோக் அலப், அஹ்மத் அகாபி.ஃப், யூசுப் அக்சோரா, ஜலால் சாஹிர், கவிஞர் அமீன் பக், மற்றும் பல மாணவர்கள், இளம் தலைமுறையினர் ஆகியோர் பாரம்பரிய தோரானிய்ய வாதத்தை சரிகண்டார்கள். இவர்கள் முதலாவது தாம் துர்கியர் என்றும், இரண்டாவதாகத்தான் தாம் முஸ்லிம்கள் என்றும் வாதித்தனர். இவர்களின் கோஷம் ***அல்ஜாமிஅத்துல் இஸ்லாமிய்யா*** என்ற அமைப்பை புறக்கணித்து ***அல்ஜாமிஅத்துத் தோரானிய்யா*** என்ற அமைப்பை முன்னிலைப்படுத்துவதாகும். இவர்கள் نحن أتراك ، فكعبتنا طوران நாம் துர்கியர், எமது க.ஃ.பா தோரான் ஆகும் என்பது இவர்களின் கோஷமாகும். இவர்கள் செங்கீஸ்கான் காலத்து கவிதைகளை இசைத்து கவிபாடுவார்களாம்…. (2)

---------------------

*1-* العلمانية .. إمبراطورية النفاق من مهد لها الطريق - (*1 / 10*)

*2-* ماذا خسر العالم بانحطاط المسلمين لأبي الحسن الندوي ، ص : *184- 186*

தோரானிய்ய வாதிகள் முதலாவது உலகமகா யுத்தத்தில் தோல்வியுற்றதன் பின்னால் 1918- 07-30ல் (1) அமை ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டு துர்கியத் தலைமைத்துவத்தில் இருந்து விலகிக் கொண்டனர். தோரானிய வாதத்தின் பின்னர் **"துர்கிய தேசியவாதம்**" துர்கியை ஆட்டிப்படைத்தது. யூதப் பின்னணியில் இயங்கி வந்த கற்பனை அமைப்பான

**( الاتحاد والترقي )** இளைர் அமைப்பு கலைக்கப்பட்டது…. " **கமால் அதாதுர்க்** -துர்கியச் சிலை- ஏகாதிபத்தியவாதிகளை விரட்டுதல் என்ற வெளிப்படையான நாடகத்தில் கி.பி 1920ல் **الجمعية (الوطنية**) தேசியவாத அமைப்பை தோற்றுவித்து அதன் ஊடாக ஆங்கில ஆதிக்க சக்திகளை எதிர்க்கப் போவதாக அறிவித்தான். இங்கு உஸ்மானிய அரசு இரண்டாகப் பிளவுபடுகின்றது.

1- ***சுல்தான் தலைமையில் கொஸ்தான்தி நோபிளில் காணப்படும் நிறைவேற்று அதிகார அரசு.***
2- ***அங்காராவில் காணப்படும் எதிரணி.***

இவ்விரண்டு அரசுகளுடனும் ஆங்கிலயர் தொடர்புகளை ஏற்படுத்தி இருந்தனர். காலப்போக்கில் ஆங்கிலயரின் அடிவருடியாக சுல்தான் **வஹீதுத்தீன்** செயல்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டு சுல்தானுக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. நிலைமை மோசமடைந்த போது சுல்தானின் அவரது ஆதரவாளர்கள் குன்றிய நிலையில் அவர் கொஸ்தான்திநோபிளை விட்டும் வெளியேற நிற்பந்திக்கப்பட்டார். முஸ்த.ஃபா கமால் அணியினருக்கு நிலைமை சாதகமானது. இஸ்லாமிய கிலா.ஃபத்தை இல்லாதொழித்து, மதச் சார்பற்ற சிந்தனை கொண்ட அரசை உருவாக்கிட கமாலின் கும்பலுக்கு வழிபிறந்தது. (3)

இதை சிந்திக்கின்ற போது ஒரு சக்திவாய்ந்த அரசையும் வீழ்த்தும் சக்தி இனவாத, தேசியவாத சிந்தனைகளுக்கு உண்டு என அறிய முடிகின்றது . உஸ்மானிய அரசில் முதலாவதாக இனவாதம், பின்னர் தேசியவாதம் பரப்பட்டது. அதற்கு யூதர்கள் பின்னணியில் இருந்தனர். அவ்விரண்டும் ஒரு அரசு கவிழ்க்கப்படக் காரணமாகியது. அரசை வீழ்த்திய பின்னர் தாராண்மைவாதம்- மதச்சார்பற்ற போக்கு, இஸ்லாம் ஒழிப்பு, இஸ்லாமிய அரசின் யாப்பில் முழுமையான மாற்றம் போன்ற நடவடிக்கைகள் ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியத்தை தருகின்றது.

சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீத் (ரஹ்) அவர்களிடம் பலஸ்தீனில் யூதர்களுக்கென தனி இடம் கேட்பட்டதை அவர்கள் மறுத்ததைத் தொடர்ந்து இஸ்லாமிய அரசை வீழ்த்திட யூதர்களால் போடப்பட்ட வரைவபடம் தெளிவாகவே நடைமுறைப்படுத்தப்பட்டது என்றால் காலம் காலமாக இஸ்லாத்தை பெயரளவில் பின்பற்றி வந்த இஸ்லாமிய அறவீனர்களின் பலவீனம் இங்கு தெளிவாகின்றது.

---------------------

1- (கொஸ்தான்தி நோபிளை ஆங்கிலயர் கைப்பற்றி ஆண்டு, பலஸ்தீன் ஆக்கிரிமிக்கப்பட்ட ஆண்டு )

2- العلمانية .. إمبراطورية النفاق من مهد لها الطريق - (1 / 10)

3- العلمانية : إمبراطورية النفاق من مهد لها الطريق - (1 / 11)

## தேசியவாதத்தின் சாதக பாதகங்கள்

தேசியவாத சிந்தனையால் இஸ்லாத்திற்கு எவ்வித சாதகமும் கிடையாது. மாற்றமாக பல பாதகமான பல விளைவுகளை அது ஏற்படுத்தி இருக்கின்றது. அவற்றில் முக்கியமான அம்சங்கள் இங்கு தரப்படுகின்றன.

### ✔ துர்கிய இஸ்லாமிய கிலா.ஃ.பத்தின் வீழ்ச்சி

இஸ்லாமிய கிலா.ஃ.பத் பரந்து விரிந்த சாம்ராஜ்யமாகக் காணப்பட்டது. அதன் எல்லை நாடு தேசம் என்பதற்கு அப்பால் இஸ்லாமிய சமூகம் என்ற வரையறைக்குள் நிலைபெற்றிருந்தது. ஆபிரிக்கர், ஐரோப்பியர், துர்கியர், இந்தியர், அரேபியர், அரேபி அல்லதாவர் என்ற வித்தியாசம் இன்றி வாழ்ந்த நிலை மாறி அரேபியர், துர்கியர் என்ற வாதத்தீ மூடப்பட்டது. அது இஸ்லாமிய கிலா.ஃ.பத்தின் வீழ்ச்சிக்கு அடிகோலிய முக்கிய காரணிகளில் ஒன்றாகும். இஸ்லாமி வீழ்ச்சியைத் தொடர்ந்து மற்றும் சில பாதகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

***முதலாம் உலகப் போரின் போது பிரித்தானியா துர்கியை ஆக்கிரிமித்தது.*** 1922 நவம்பர் மாதம் கூடிய சமாதான மாநாட்டின் போது துர்கியின் விடுதலை, சுதந்திரம் பற்றி பேசப்பட்டது. அதற்கு பிரத்தானியாவின் பிரதமராக இருந்த கர்ஸோன் என்பவர் துர்கியப் பிரதமரான இஸ்மத் இனோனோ என்பவரிடம் **“உங்களை நாம் தினநாட்டுடன் விட்டுவைக்கத் தயார் இல்லை. அது மற்றொரு முறை முஸ்லிம்கள் ஒன்று கூட வழிவகுக்கும். அதனால் நாம் கிழக்கில் எதிர்கொண்ட நீண்ட சவால்களுக்கு மீண்டும் முகம் கொடுக்கும் நிலை உருவாகும்”** என்றார்.

இவ்வாறு முஸ்லிம்கள் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபடுவது தமக்கு பாதமானது என்ற அச்சத்தை வெள்ளையர் வெளிப்படுத்தியபோது துர்கியின் சிலை கமால் அதாதுர்க்- **முஸ்த.ஃ.பா கமால்** பிரித்தானிய அரசின் அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாக வாக்களித்தார். அதற்கு பிரித்தானியா பின்வரும் நிபந்தனைகளை முன்வைத்தது. அவை கர்ஸோன் ஒப்பந்தம் நிபந்தனைகள் என்று அறியப்பட்டது.

**நிபந்தனைகள் பின்வருமாறு.**

1- துர்கி இஸ்லாமி மார்க்கத்தை விட்டுவிட வேண்டும்.
2- கிலா.ஃ.பத் ஆட்சியை நீக்கி வேண்டும்.
3- கிலா.ஃ.பத் பற்றிப் பேசுகின்ற அனைத்து இயக்கங்களும் முடக்கப்படுவதை வாக்குறுதி தர வேண்டும்.
4- இஸ்லாமிய ஷரீஆ சட்டத்திற்கு பதிலாக மனித சட்டம் நடைமுறைக்கு வரவேண்டும். அதற்காக இஸ்லாமி ஷரீஆ சட்ட யாப்பாக இருந்து வரும் உஸ்மானியரின் யாப்பு முழுமையாக மாற்றப்பட்டு தாரான்மைவாதத்தை உறுதிப்படுத்தும் மதச்சார்பற்ற யாப்பு தயார் செய்யப்படல் வேண்டும்.

--------------------------------

*1-* العلمانية .. إمبراطورية النفاق من مهد لها الطريق - (*1* / *12*)

*2-*

இந்த அனைத்து நிபந்தனைகளுக்கு முஸ்த.ஃபா கமால் செவிசாய்த்தார். அதனால் துர்கியப் பூமியை மீட்டித்தந்தவர் என்ற பெயர் சூடப்பட்டார்.

பிரித்தானியா இத்துடன் தனது சதிப்பணியை நிறுத்திக் கொள்ளவில்லை. மாற்றமாக துர்கியர்களை விட்டும் பிரிந்து ஆண்மீகத்துடன் மாத்திரம் நின்று கொள்ளும் அரபு கிலா.ஃபத்தை உருவாக்கிடும் படி அரேபியர்களைத் தூண்டியது.

✔ அரசியல் வேறு மார்க்கம் வேறு என்ற சிந்தாந்தம் - علمانية– சித்தாந்தம் பிறத்தல். இதற்கு துர்கிய முன்னோடி அறிஞர்களில் ஒருவரான அப்துர்ரஹ்மான அல்கவாகிபி (மரணம்: 1902) என்பவரது .ஃபத்வா முக்கியமானதாகும். இவர் மார்க்கம் வேறு அரசியல் வேறு என்னும் கோட்பாட்டு தீர்ப்பை முன்வைத்தார். **( طبائع الاستبداد ) ( أم القرى )** என்ற இரு நூல்களை அவர் எழுதி அவரது கருத்துக்களை நியாயப்படுத்தி இருந்தார். உஸ்மானிய கிலா.ஃபத்தில் வாழ்ந்த அஷ்ஷைக் முஸ்த.ஃபா ஸப்ரி என்ற மேதை இந்த சிந்தனை தவறானது என்பதை விளக்க *(1)* **الرد على منكري النعمة من الدين والخلافة والأمة** என்ற நூலை வெளியிட்டு இவ்வாறான நச்சுக்கருத்துக்கள் முஸ்லிம் சமூகத்தில் ஊடுருவதை எச்சிரித்தார்.

✔ முஸ்லிம் நாடுகள் துண்டாடப்படுதல்

✔ தேசிய வாத சிந்தனையைத் தாங்கிய முஸ்லிம்கள் தோற்றம் பெறுவதன் மூலம் மத்திய கிழக்கில் யூதர்களுக்கான தனி நாடு அமைதல்.

✔ நாஸ்தீக சிந்தனை முஸ்லிம் உலகில் பரவக்காரணமாக அமைந்தது. مفاهيم إسلامية - الأوقاف المصرية - (1 / 44)

✔ இஸ்லாமி சிந்தனைகள் இல்லாதொழிக்கப்பட்டு யூதர்கள், கிரிஸ்தவர்கள், நாஸ்தீகவாதிகள், முஸ்லிம்கள் அனைவரும் சமம் என்ற சர்வமத சம்மதக் கோட்பாடு தோன்றியமை.

-----------------------

*1*- مفاهيم إسلامية الأوقاف المصرية (*1/ 44*)

*2*- العلمانية .. إمبراطورية النفاق من مهد لها الطريق - (*1 / 16*)

# சேர் செய்யித் அஹ்மத் கான் வாழ்வும் சீர்திருத்தப்பணியும்

***இந்தியாவின் நிலை பற்றிய சுருக்கமான அறிமுகம்:***

எட்டு நூற்றாண்டுகள் இந்தியா முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் இருந்தது. கி.பி பதின் ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் அது பலவீனம் அடையத் தொடங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆரம்பத்தோடு இந்திய கிழக்குக் கம்பனியின் -பிரித்தானியாவின்- ஆதிக்க நோக்கமான வருகையை எதிர் கொண்டது. இந்திய தேசம் அனைத்தும் பறிபோன நிலையில் டில்லி செங்கோட்டைக்குள் இஸ்லாமிய ஆட்சி மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆங்கிலயர் நாட்டின் பெரும்பகுதிகளில் ஊடுருவி நிலை கொண்ட பின்னர்தான் ஜிஹாத் அழைப்பு விடுக்கப்பட்டது. அதுவரை முஸ்லிம்கள் உறக்கத்தில்தான் இருந்தனர். பால்கோட்டில் கி.பி.1831ல் நடை பெற்ற போரில் முஜாஹிதீன்கள் பலர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து முஸ்லிம்கள் விரக்தி நிலைக்குச் சென்றனர். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளில் வீரயத்துடன் போரடிய போராளிகள் ஆங்கிலயருக்கு பாரிய சேதங்களை விளைவித்து தமது வீரத்தை வெளிப்படுத்தினர். இருந்தும் போரில் தாக்குப்பிடிக்க முடியாது இறுதியில் தோல்வியுற்றனர். அதற்கு வெள்ளையர்கள் முஸ்லிம்களை எல்லாவழிகளிலும் பழிதீர்த்தனர். அவர்களின் சொத்துக்கள், நிலபுலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. எந்த வழிகளில் எல்லாம் பழிவாங்க முடியுமோ அவ்வாறான அனைத்து வழிககளிலும் பழிவாங்கினர். இந்த தோல்வியின் பின்னணி பற்றி ஆராய்கின்ற போது முஸ்லிம்கள் தூய இஸ்லாத்தில் வளர்க்கப்படாது இந்து, பாரஸீக இந்தியமும், பாரசீகமும் கலந்த மத நம்பிக்கை வளர்க்கப்பட்டது காரணம் எனத் தோன்றுகின்றது.

போரியலின் துன்னபத்தால் சோர்வுற்ற முஸ்லிம்கள் வாழ்க்கையில் விரக்தி நிலைக்குச் சென்றனர். போரை வழிநடத்திய அறிஞர்கள் கைது செய்யப்பட்டு அந்தமான் தீவுக்கு கடத்தப்பார்கள். அங்கு எவ்வித விசாரணையும் இன்றி வதைக்கப்பட்டார்கள். இந்நிலையில் சீர் திருத்தம் பற்றிய புதிய பரிணமான சிந்தனையை முன்வைக்கின்ற பல சீர் திருத்தவாதிகள் தோன்றினர் அவர்களில் செய்யித் அஹ்மத் கான் அவர்களும் ஒருவராகும். முஸ்லிம்கள் சிதறடிக்கப்பட்டு, அவர்களின் அறிஞர்கள் சிறைகளில் வாடிக்கொண்டிருக்க, மீதமானோர் பள்ளிகளில் தஞ்சம் அடைந்திருந்தனர். முஸ்லிம்களை ஏழமான கண்கொண்டு ஆங்கில அரசு பார்த்தது. அதனால் அதில் உயர் பதவிகளில் இருந்து அவர்கள் விலக்கப்பட்டிருந்தனர். (1)

***பிறப்பும் குடும்பப் பின்னணியும்***. (2) “இவரது முன்னோர்கள் மெரோக்கிவில் இருந்து ஆப்கானிஸ்தான் ஹீரத் மாகணத்தை வந்தடைந்தனர். அங்கிருந்து மன்னர் அக்பரின் காலத்தில் டில்லியை வந்தடைந்தனர். **:**இவரது குடும்பத்தினர் முகலாயர் ஆட்சியில் உயர்பதவி வகித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

--------------------

*1-* مختصر من كتاب: تاريخ الدعوة الإسلامية في الهند للمؤلف : مسعود الندوي ص : *179 – 189*

*2- தற்கால இஸ்லாமிய சிந்தனை- எம்.எஸ்.எம். அனஸ் பப: 69-73*

3- http://aawsat.com/details.asp?section=17&article=649865&issueno=12040#.UVb8d5N0xyQ

இவ்வாறான உயர் குடும்பத்தில் செய்யித் அவர்கள் 17 ஒக்டோபர். கி.பி. 1817 டில்லியில் சிறந்த கல்விப் பின்னணியில் காணப்பட்ட குடும்பத்தில் பிறந்தார். இவரது வாழ்க்கையைச் சீரபடுத்துவதில் இவரது தாய்க்கு பாரிய பங்களிப்பு உண்டு. இவருக்கு பத்தொன்பது வயதாகிய போது இவரின் தந்தை மரணிக்கின்றார்கள். அதனால் இவர் ஆங்கில அரசின் இலிகதராகப் பணியாற்றினார். பின்னர் நீதி மன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இது கி.பி 1857ல் இந்தியப் புரட்சி நடப்பதற்கு முன்னதாகும்.

## *சீர் திருத்தப்பணிகள்*

● **சேர் செய்யித் கான்** அவர்கள் கி.பி 1870-ல் மக்கா சென்று தனது சீர் திருத்த சிந்தனையை அறிஞர்களிடம் முன்வைத்தார். இவர் தஜ்தீத், இஸ்லாஹ் என்ற மார்க்கத்தின் புதிய சிந்தனைப் புரட்சியின் அவசியத்தை வலியுறுத்தினார். இஜ்திஹாதின் வாசல் மூடப்பட்டுள்ளது என்ற கருத்தை கடுமையாக எதிர்த்தார்.

● பழைய மத்ரஸாக்களின் கல்விமுறையை கடுமையாக எதிர்த்தார், அதன் பாடத் திட்டங்களை விமர்சனம் செய்தார். (1)

● அஹ்மத்கான் ஆங்கிலயர்கள் பற்றிக் குறிப்பிடும் போது “நீங்கள் இங்கிலாந்து நாட்டவர்களைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். அவர்களின் வளங்கள் நாளாந்தம் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. வளங்கள் அதிகரிப்பதால் பல நூற்றாண்டுகள் அது வளம்பெற்றுக் காணப்படுவதோடு, தனக்கு எதிரான இடர்களை அது திறமையாக முகம் கொடுக்கும். இந்தியா இது பற்றிய 1856 வது ஆண்டு அறிந்து வைத்திருக்குமானயின் அது உலகம் பற்றியும் அதன் எதிரியின் பலத்தையும் அறிந்திருக்கும். அது தன்னை நீதிமான அளவீட்டுக் கருவியால் அளவீடு செய்து பார்த்திருக்குமானால் 1858ல் நடைபெற்றது போன்ற கவலை தரும் நிகழ்வுகள் நடந்திருக்காது. மடமைதான் தீமையின் வாசலாகும் என்றார் (3

● சேர் அஹ்மத் கான் அவர்கள் தனது சிந்தனைகளை மக்களிடம் கொடு செல்வதற்காக நாளாந்த பத்திரிக்கை, மாதாந்த சஞ்சிகைகளை ஆங்கலிம், மற்றும் உர்து மொழிகளில் வெளியிட்டார். அலிகரா Aligarh Gazette என்ற சஞ்சிகையும், ‹«تهذيب الأخلاق» என்ற உர்து மலர் முக்கியமானதாகும். (2)

● இந்த நிலையில் இந்தியப் புரட்சியின் போது ஆங்கிலயர்களுக்கு உதவியாக இருந்து சேர் செய்யத் அஹ்மத்கான் அவர்களின் தனது சமூகத்திற்கு ஏற்பட்ட இந்த துக்ககரமாக நிலை பற்றி சிந்தித்து பல சீர்திருத்தங்களை முன்வைத்தார்.

● இதற்கு முன்னர் புரட்சிக்கான காரணிகள் என்ற நூலை எழுதி முஸ்லிம்கள் புரட்சியில் பங்குபற்றியமைக்கான காரணத்தை ஆங்கிலயருக்கு விளக்கினார். அதன் மூலம் முஸ்லிம்கள் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் சந்தேகங்களை நீக்க முயன்றார். அதில் பாரிய திருப்பம் ஏற்பட்டது.

● அவ்வாறே W.W. HINTER வில்லியம் ஹின்டர் என்பவர முஸ்லிம்கள் குர்ஆனைக் கொண்டு நடைமுறைப்படுத்தும் காலமெல்லாம் அவர்கள் எந்த அரசுக்கும் விசுவாசமானவர்களாக நடந்த கிடையாது என்று INDIAN MUSLIMANS என்ற நூலிலில் எழுதிய அத்தங்களுக்கு மறுப்பு தெரிவித்திருந்தார்.

● அவ்வாறே ஐரோப்பியரின் மொழியான ஆங்கிலத்தைப் படிப்பதன் மூலமே நவீன காலக் கல்வியில் முன்னேற்றம் அடையலாம் என்றார். அக்கால கட்டத்தில் முஸ்லிம்கள் தமது குழந்தைகள் கிரிஸ்தவத்தால் உந்தப்படுவதை அஞ்சி ஆங்கிலக்கல்வியை தடை செய்திருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். (3)

--------------------------------

1- http://aawsat.com/details.asp?section=17&article=649865&issueno=12040#.UVb8d5N0xyQ
2- மேற்படி இணையம்
3- مختصر من كتاب : تاريخ الدعوة الإسلامية في الهند ص: 189- 215

● சேர் அஹமத் கான் அவர்கள் நவீன கல்வியை முஸ்லிம் சமூகத்திற்கு வழங்குதல் என்ற திட்டத்தில் வெற்றி பெற்றார்கள். இதற்கு அவர் இஸ்தாபித்த அலிகார் பல்கலைக்கழகம் நல்ல உதாரணமாகும். அங்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்து பட்டம் பெற்று உயர்பதவிகளில் இருக்கின்றனர் என்பதை மறுக்க முடியாது.

● சேர் அஹமத் கான் அவர்கள் கண்ட கனவை அது முழுமையாக்க முடியவில்லை என்ற பாதகமான ஒரு விமர்சனமும் உண்டு. இந்த அலிகார் கல்லூரி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தேவபந்து தாருல் உலூம் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதனால் இருவேறுபட்ட சிந்தனைகளைத் தாங்கிய மாணவர்கள் உருவாகினர். (1)

● கி.பி 1860- களில் ஐரோப்பிய சுற்றுப்பயணம் முடிந்ததும் «الجمعية الإسلامية العلمية» என்ற அமைப்பை தோற்றுவித்தார், அத்தோடு «كلية عليكرة الإنجليزية الإسلامية» என்ற ஆங்கில இஸ்லாமிய ஆங்கிலக்கல்லூரியை ஆரம்பித்தார். இதுான் பிற்காலத்தில் «جامعة عليكرة الإسلامية» என்ற அலிகார் பல்கலைக்கழகமாக மாறியது. (2)

## குற்றச்சாட்டு

● சேர் செய்யித் அஹ்மத்கான் அவர்கள் ஐரோப்பிய மோகத்தால் அதிகம் உள்வாங்கப்பட்டவர் என்றும் அவர்களின் கலாசாரத்திற்கு அமைவாக முஸ்லிம்கள் ஆடை அணிவது, நடைமுறைகளை மாற்றி அமைப்பது பற்றி எல்லாம் அவர் பேசி இருக்கின்றார் என்ற குற்றச்சாட்டுடன்,

● அல்குர்ஆன் இறைத்தூதரின் வார்த்தை என்றும்,சுவர்க்கம், நரகம் இல்லை என்றும், முஃஜிஸாத், ஜின்கள் என்பன பொய் என்றும் வாதிட்டார்.

● வெள்ளையரின் கூற்றுக்கு மாற்றமாக இடம்பெறும் அல்குர்ஆனிய வசனங்களுக்கு தவறான விளக்கம் அளித்து அவர்களைத் திருப்திப்படுத்தினார்.

● ஆங்கிலயர் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்வது கூடாது என்றார். இதனால் இவர் ஆங்கிலயரின் கைக் கூலிகளில் ஒருவர் என முத்திரை குத்தப்பட்டார்.

● சேர் அஹமத் கான் அவர்களும் அவர்களின் வழிவந்தவர்களும் அறிஞர்களையும், மார்க்கத்தை அதன் அசல் தன்மையுடன் பின்பற்றும் மக்களையும் ஏளனமான பார்வை கொண்டு நோக்கினர் (3). மேலதிக தகவல்களுக்கு (4 )

------------------------------

1- http://aawsat.com/details.asp?section=17&article=649865&issueno=12040#.UVb8d5N0xyQ
2- அதே இணையம்.
3- تاريخ الدعوة الإسلامية في الهند ص: 189- 215
4- http://www.sbeelalislam.net/index.php?option=com_content&task=view&id=1218&Itemid=62



# இமாம் ஹஸனுல் பன்னா அவர்களின் வாழ்க்கை வரலாறும், அவர்களின் சீர் திருத்தப் பணிகளும்.

***(1906- 1949)***

***பிறப்பு:*** எகிப்தில் புஹைரா பிரதேசத்தில் மஹ்மூதிய்யா கிராமத்தில் 1906- 10- 14ம் திகதி அறிவும், மார்க்க சிந்தனையும் சிறந்து விளங்கி குடும்பத்தில் பிறந்தார்கள். இவரது தந்தை ஹதீஸ் கலையில் தேர்ச்சி பெற்ற அறிஞராக இருந்தார்கள். அவர்கள் கைக்கடிகாரம் திருத்துபவராக இருந்ததால் “ஸாஆத்தி” என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்கள்.

இமாம் பன்னா அவர்கள் சிறுவயதிலேயே புனித குர்ஆனை மணனம் செய்திருந்தார்கள். அந்தப் பருவத்திலேயே இஸ்லாமிய சேவைகள் புரிவதில் விருப்பம் உள்ளளவராக காணப்பட்டார்கள். **جمعية الأخلاق الدينية** என்ற அமைப்பின் தலைவராக இருந்தார்கள். அவர்கள் ஆரம்ப பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த போது **جمعية محاربة المنكرات தீமைகளை எதிர்க்கும்** அமைப்பொன்றை உருவாக்கி இருந்தார்கள். அவர்கள் இரண்டாம் நிலைக்கல்லலூரியில் படித்து வெளியேறிய போது எகிப்து மட்டத்தில் ஐந்தாவது இடத்தில் இருந்தார்கள். தாருல் உலூம் என்ற கல்லூரியில் படித்து வெளியேறி பின்னால் இஸ்மாயீலிய்யாவில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்கள்.

## இமாம் அவர்கள் பிறந்த போது முஸ்லிம் உலகின் நிலை

● **கி.பி1924-ல் உஸ்மானிய்ய கிலா.ஃ.பத்** வீழ்ந்தமை. அந்த அரசின் சொத்துக்கள் கி.பி1915ம் ஆண்டு பங்கீடு செய்து கொண்டமை. இது சொய்ஸ் பேகோ ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகின்றது.

● பலஸ்தீனப் பூமி சூறையாடப்பட்டு, முஸ்லிம் உலகு சிதைக்கப்பட்டு, தேசியவாதம், ஜனநாயனம், சமஉடமை போன்ற கோட்பாடுகள் பற்றிய சிந்தனை சமூகத்தில் விதைக்கப்பட்டுக் கொண்டிருந்தமை.

● ஆங்கில காலணித்துவ சக்திகளை எதிர்ப்பதில் எகிப்தின் படை பலவீனப்பட்டுக் காணப்பட்டதோடு, பலஸ்தீன் பிரச்சினைகளுக்கு உதவத் திராணி அற்றுக் காணப்பட்டமை.

---------------------------

1- موقع قصة الإسلام : 63 عاما على استشهاد الإمام حسن البناء

## முஸ்லிம் உலகும் பன்னாவின் வருகையும்.

பன்னா அவர்கள் கி.பி. 1906ல் பிறக்கின்றார்கள். 1949ல் மரணிக்கின்றார்கள். இது முஸ்லிம் உலகம் பாரிய சவால்களை எதிர் கொண்ட காலகட்டமாகும். 1882 எகிப்து ஆக்கிரிமிக்கப்பட்டு ஆங்கிலியர் கைவசம் இருந்து வருகின்றது. 1924ல் இஸ்லாமி கிலா∴த் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. தேசியவாதகள் மதச்சார்பை சிந்தனையை மக்கள் மனங்களில் விதைத்துக் கொண்டிருக்கின்றார்கள். எகிப்தின் வளம் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மக்கள் கல்வி அறிவு அற்றவர்களாக காணப்படுகின்றார்கள். பொருளாதாரம் வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இந்நிலைகைளை இமாம் பன்னா அவர்கள் தனது இளமைப்பவரும் முதல் அவதானித்தே வருகின்றார்கள். இதற்கு மாற்றுவழி வேண்டும் என்பதை உணர்ந்த அவர்கள் கி.பி1928ம் ஆண்டு அல்இக்வானுல் முஸ்லிமூன் என்ற இயக்கத்தை தோற்றுவித்து அதன் ஊடாக இஸ்லாமிய கிலா∴பத்தை மீட்ட விரும்புகின்றார்கள்.

இமாம் பன்னா அவர்கள் தனது போக்கு பற்றி விபரிகிக்கின்ற போது இவ்வாறு பதிவு செய்துள்ளார்கள்.

**يقول الأستاذ البنا :**إن أساس التعاليم الإسلامية ومعينها هو كتاب الله وسنة رسوله صلى الله عليه وسلم، اللذان إن تمسكت بهما فلن تضل أبدا، وإن كثيرا من الآراء والعلوم التي اتصلت بالإسلام وتلونت بلونه تحمل لون العصور التي أوجدتها والشعوب التي عاصرتها؛ ولهذا يجب أن تستقي النظم الإسلامية التي تحمل عليها الأمة من هذا المعين الصافي معين السهولة الأولى، وأن نفهم الإسلام كما كان يفهمه الصحابة والتابعون من السلف الصالح رضوان الله عليهم، وأن نقف عند هذه الحدود الربانية النبوية حتى لا نقيد أنفسنا بغير ما يقيدنا الله به، ولا نلزم عصرنا لون عصر لا يتفق معه، والإسلام دين البشرية جمعاء.

அவரது வழிமுறை அமைப்பு பற்றியும் அதன் நடைமுறை பற்றியும் இவ்வாறு கூறப்படுகின்றது.

لسنا حزباً سياسياً، وإن كانت السياسة على قواعد الإسلام من صميم فكرتنا.. ولسنا جمعية خيرية إصلاحية، وإن كان عمل الخير والإصلاح من أعظم مقاصدنا.. ولسنا فرقا رياضية، وإن كانت الرياضة البدنية والروحية من أهم وسائلنا..ولكننا أيها الناس: فكرة وعقيدة، ونظام ومنهاج، لا يحدده موضع ولا يقيده جنس، ولا يقف دونه حاجز جغرافي، ولا ينتهي بأمر حتى يرث الله الأرض ومن عليها, ذلك لأنه نظام رب العالمين، ومنهاج رسوله الأمين.نحن أيها الناس - ولا فخر- أصحاب رسول الله صلى الله عليه وسلم، وحملة رايته من بعده، ورافعو لوائه كما رفعوه، وناشرو لوائه كما نشروه، وحافظو قرآنه كما حفظوه، والمبشرون بدعوته كما بشروا، ورحمة الله للعالمين) ولتعلمُنّ نبأه بَعْدَ حِيْنٍ (1)

--------------------------

1. الإمام **حسن البنا** - موسوعة الإخوان المسلمين
*www.ikhwanwiki.com/index.php?title=الإمام_حسن_البنا*

இமாம் பன்னா அவர்கள் இஸ்மாயீலிய்யா நகரில் ஆசிரியராக கடமை ஆற்றிக் கொண்டிருந்த போது அங்கு ஆங்கிலயர்களின் முகாம் இருந்தது. அது பற்றி பன்னா இப்படி தனது கவலையை வெளிப்படுத்துகின்றார்கள்

**ويعلم الله كم من الليالي كنا نقضيها نستعرض حال الأمة، وما وصلت إليه من مختلف مظاهر حياتها، ونحلل العلل والأدواء، ونفكر في علاج وحسم الداء، ويفيض بنا التأثر لما وصلنا إليه إلى حد البكاء."**

நாம் இந்த சமுதாயத்தின் நிலை பற்றியும், அது இவ்வளவு தூரம் அதளபாதளாத்திற்கு சென்றுவிட்டதே! இதன் நோய் நிவராணி என்ன, அதற்கான சிகிச்சை முறை என்ன என்பன பற்றியும் எத்தனையோ இரவுகள் பேசிக் கொண்டோம். அதன் தாக்கம் சிலவேளை அழுகைக்கும் எங்களைக் கொண்டு சென்றுவிடும் என்கிறார். (1)

இவ்வாறு சமூகத்தின் மீது கவலையும் ஆத்திரமும் கொண்ட பன்னா அவர்கள் அல்.ஃபத்ஹ் அத்தியாயம் பத்தாவது வசனத்தில் இடம் பெறும் பைஅத் வசனத்தை ஆதாரமாகக் கொண்டு அறுவர் அல்லாஹ்வைப் பொறுப்பாக்கி சத்தியமிட்டு பைஅத் செய்து கொண்டோம். இவர் தோற்றுவித்த அமைப்புத்தான் அல்இக்வானுல் முஸ்லிமூன் என்ற அமைப்பாகும். அவர்கள் முஸ்லிமகள் பற்றி பின்வரும் நிலைப்பாட்டில் இருக்கின்றனர்.

● முஸ்லிம்கள் அனைவரும் ஒரே சமூகம். அவர்களை அகீதாதான் ஐக்கியப்படுத்தும்.

பன்னா அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

● **يقول البنا: "كل شبر أرض فيه مسلم يقول لا إله إلا الله، أو رفعت عليه يومًا راية الله، فقد صار أمانة في يد المسلمين**

**لا إله إلا الله،** என்று கூறுகின்ற ஒரு முஸ்லிம் வாழ்கின்ற ஒரு சாண் அளவு பூமி, அல்லது அந்தக்கொடி தொங்கவிடப்பட்டுள்ள பூமி முஸ்லிம்களின் கரங்களில் தரப்பட்டுள்ள அமானிதமாகும்.

● இந்த அடிப்படையில் பலஸ்தீன் முஸ்லிம் தேசியத்தின் ஒரு அங்கமாகும். போர் யூதர்களுடன் இருப்பினும் சரி இல்லாமல் இருப்பினும் சரி யூதரிகளோடு போராடியே அந்தப் பூமியை மீட்டெடுக்க வேண்டும், யூதர்களுடன் அகிம்சை வழிப்பேச்சுக்கு இடமில்லை என்ற கருத்தை வெளிப்படுத்தினார்கள்.

● ஜிஹாத் மறுமை வரை நடந்தேறும். அதன் முதலாவது படித்தரம் மனதால் வெறுப்பதாகும். வாளால் இறை மாரக்கம் ஓங்கிடப் போரிடுவது அதன் உயர் நிலையாகும். தீய ஆட்சியாளர்களிடம் சத்தியத்தை ஓங்கி ஒலிப்பதும் ஜிஹாதாகும்.

## ஜிஹாதை நியாயப்படுத்தும் காரணிகள்.

இமாம் பன்னா அவர்கள் ஜிஹாதிய சிந்தனையில் வளர்ந்தவர்கள் என்ற வகையில் அதன் நியாயங்களை இவ்வாறு அடையாளப்படுத்துகின்றார்கள்.

1- அத்துமீறலைத் தடுத்தல், 2- உயிர் மற்றும் குடும்பம் , தேசியம், இஸ்லாமிய த.ஃவாவிற்கு தடைகள், கொள்கைக்கான சுதந்திரப் பாதுகாப்பு, பலவீனர்கள், அநீதி இழைக்கப்பட்டோருக்கு உதவுதல் போன்ற காரணிகள்

---------------------

1- موقع قصة الإسلام : 63 عاما على استشهاد الإمام حسن البناء

முஸ்லிம் உலகில் தோன்றிய சீர் திருத்தவாதிகள் பற்றி நோக்குகின்ற போது அறிவியல், பண்பாட்டு வீழ்ச்சியில் உச்ச நிலையை அடைந்த போதே அல்லாஹ் அவர்கள் மூலம் மார்க்கத்தை புத்துயிர் ஊட்டி பாதுகாத்துள்ளான் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

முஜ்தஹித்கள், முஜத்தித்கள், முஸ்லிஹீன்கள் போன்றோரின் வரலாற்றைப் பார்க்கின்ற போது அது இன்னும் துல்லியமாகத் தெரிகின்றது. எமனில் ஷவ்கானி, அல்அமீர் இஸ்மாயீல் அஸ்ஸன்ஆனி, அல்ஜீரியாவில் இப்னுபாதீஸ், இந்திய உபகண்டத்தில் ஷாஹ்வலியுல்லாஹ், அஹ்மத் சிர்ஹிந்தி, மௌலானா மௌதூதி, அபுல்ஹஸன் நத்வி, எகிப்தில் இமாம் ஹஸனுல் பன்னா, லெபனானில் ரஷீத் ரிளா, துர்கியில் ஷகீப் அர்ஸலான், சவூதி அரேபியாவில் முஹம்மத் பின் அப்தில்வஹ்ஹாப் இப்படி எண்ணற்ற சீர் திருத்தவாதிகள் தோன்றி மறைந்துள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவரது பார்வையும் வித்தியாசமானதாகவும், அவர்கள் வாழ்ந்த சூழ்நிலைக்கு அமைவானதாகவும் அமைந்திருந்ததை மறுக்க முடியாது. அது அவசியப்பட்ட ஒன்று என்பதையும் அங்கீகரித்தே ஆக வேண்டும்.

இமாம் பன்னா அவர்களின் வாழ்க்கை வராலாறு ஒரு சீர் திருத்தவாதியின் முழுமையான பார்வை பற்றியும், அவரது போக்கு இலக்கு பற்றியும் உண்மையில் துல்லியமாக எடுத்துக் கூறும் வரலாறு என்றே அவர் பற்றி வாசிப்பு உணர்த்துகின்றது.

சேர் செய்யித் அஹ்மத் கானை இமாம் பன்னாவுடன் ஒப்பிடும் போது பன்னா பன்முக ஆளுமையும், அஹ்லுஸ்ஸுன்னாக்களின் கொள்கையை அடியொட்டி நடந்தவர் என்பதும் புலனாகின்றது.

பன்னா ஆங்கிலயர்களை எதிரயாக நோக்கினார், யூதர்களுடன் போர் செய்வதே வழி என்றார். ஆனால் சேர் செய்யித் அஹ்மத் கான் அவர்கள் ஆங்கிலயர்களை அளவுக்கு அதிகமாக உயர்த்திப் புகழ்ந்தார், அவர்களின் திருப்திக்காக அல்குர்ஆனிய வசனங்களுக்கும் தப்பும் தவறுமான அர்த்தம் செய்தார். இது ஒரு சீர்திருத்திவாதியிடம் காணப்பட் முடியாத ஒரு அம்சமாகும்.

இமாம் பன்னா அவர்கள் கி.பி1949ல் இறுக்கமான ஒரு கட்டத்தில் இந்த சமூகத்தை விட்டும் பிரிந்தார்கள் என்றால் அவர் பிறந்த சூழல் அதைவிடவும் மிக மோசமானதாக இருந்திருக்கும் என்பதே யாரும் கூறாது அறிய வேண்டிய உண்மையாகும். அல்லாஹ் அன்னாரின் சீர் திருத்தப் பணிகளை அங்கீகரித்து அருள் செய்வானாக!

## முடிவுரை

இஸ்லாம் ஆதம் நபி இந்த பூமிக்கு வந்தது முதல் அறிமுகமான மார்க்கமாக இருப்பது போல ஷைதான் அவர்களுக்கு சுஜூத் செய்ய மறுத்தது முதல் அதற்கு எதிரான சவால்கள், எதிர்ப்புக்கள் தோன்றத் தொடங்கி விட்டது.

ஜாஹிலிய்ய சமூகத்தை நபிகள் நாயகம் மாற்றியமைத்த போது இஸ்லாத்தின் எதிரிகள் தம்மாலான எதிர்ப்பளைக் வெளிக்காட்டினார்கள். மதீனாவில் ஹி. 1ம் ஆண்டு அமையப் பெற்ற இஸ்லாமிய அரசுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக பல சதிகள் மேற்கொள்ளப்பட்டன.

இருந்தும் சத்தியம் ஓங்கி ஒலித்தது. அதன் சுடரை கலீ.்.பாக்கள், அவர்களின் வழிவந்தோர் ஆபிரிக்கா, சீனா, இஸ்பைன் என கிழக்கு மேற்காக எடுத்துச் சென்றனர். இஸ்லாமிய அரசு புகழில் உச்ச கட்டத்தை அடைந்த நிலையில் கிரிமிகள் மனிதனை அழிப்பது போன்று இஸ்லாமிய அரசை மேற்கின் தேசியவாத சிந்தனை ஆக்கிரிமித்தது.

இனவாதத்தின் பெயரால் இஸ்லாமிய அரசுக்கள் பிளவு ஏற்பட்டது. தோரானியர் சிந்தனையாளர் குழு, உஸ்மானியர் சிந்தனை ஆதரிப்புக் குழு என்ற இரு பிரிவுகளாகப் பிரிந்தது. பலஸ்தீனில் யூதர்களுக்கு தனிநாடு அமைக்கும் திட்டத்தை சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீத் அவர்கள் முழுமையாக புறக்கணித்தார்கள்.

இஸ்லாமிய அரசுக்கள் சதிகளை உருவாக்கிய சண்டாளர்களின் சதி வலையில் தம்மை இஸ்லாமியர்கள் எனக் கூறிக் கொண்ட யூதர்கள் இனவாத, தேசியவாத சிந்தனையை விதைத்தார்கள். அதற்கு துர்கியப் பெருமை பேசியவர்கள் இரையானார்கள். அதற்கும் சில அழைப்பாளர்கள் காணப்பட்டார்கள்.

இஸ்லாத்தின் எதிரிகளின் அயராத முயற்சியால் இஸ்லாமிய அரசு கி.பி1924-ல் அழித்தொழிக்கப்பட்டது. மட்டுமின்றி, இஸ்லாமிய அரசின் யாப்பு அன்றே குளிதோண்டிப் புதைக்கப்பட்டது. இறை நிரகாரிப்பின் யாப்பு அங்கீகாரம் பெற்றது. இது முஸ்லிம் உலகு வெட்கித்தலைகுனிய வேண்டிய நிகழ்வாகும்.

**யாஅல்லாஹ் எனக்குப் பண்பாட்டையும் அறிவையும் கற்றுத்தந்த எனது பெற்றோர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மற்றும் மனைவி பிள்கைள் அனைவரின் பாவங்களையும் மன்னித்து சுவனத்தின் வாரிசுகளாக என்னையும் அவர்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக.**

மாணவர் பெயர்: எம்.ஜே.எம். ரிஸ்வான்

பதிவு இலக்கம்: HD/ MA/ 08-09-/559

## المراجع العربية:

1- الجربوع ، عبد الله بن عبد الرحمن الجربوع
الكتاب : أثر الإيمان في تحصين الأمة الإسلامية ضد الأفكار الهدامة

الناشر : عمادة البحث العلمي بالجامعة الإسلامية، المدينة المنورة، المملكة العربية السعودية
الطبعة : الأولى، 1423هـ/2003م
عدد الأجزاء : 2
[ترقيم الكتاب موافق للمطبوع وهو مذيل بالحواشي]

2- د/، عبد الرحمن حبنكة الميداني : أجنحة المكر الثلاثة

3- الكتاب : صفحات من القضية العربية
الشقيري: أحمد الشقيري

4- الكتاب : علم واحد وعشرون نجمة-احمد الشقيري
الشقيري: أحمد الشقيري

5- الكتاب : الاختلاف في العمل الإسلامي الأسباب والآثار
: د : ناصر بن سليمان العمر
عدد الصفحات : 48
مصدر الكتاب : موقع الإسلامhttp://www.al-islam.com

6- الأوقاف المصرية مفاهيم إسلامية -

7- الندوي، أبو الحسن علي الحسيني الندوي ، دار الغد الجديد

8- الندوي ، مسعود الندوي : تاريخ الدعوة الإسلامية في الهند

9- قطب / محمد قطب : فرق معاصرة –دار الشروق

## المجلات العربية :

1- المدينة المنورة ، مجلة البحوث الإسلامية ، الجامعة الإسلامية بالمدينة المنورة
2- البيان ، مجلة البيان من المكتبة الشاملة
3- مجلة المجمع الفقهي - مصر

## இணைய தளங்கள்

1- http://www.al-islam.co موقع الإسلام

*2-* islamstory.com/ موقع قصة الإسلام

தமிழ் நூல்கள்

1- கலாநிதி: எம்.எஸ்.எம். அனஸ். தற்கால இஸ்லாமிய சிந்தனை. பண்பாட்டு ஆய்வு வட்டம். பேராதனை. 2001


eBook by: www.islamkalvi.com